★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 வைகாசி: 5 ஜ-அகிர்: 21 இதழ்: 99
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19-5-79

## வடபிரதேச ஐ. தே. க. அமைப்பாளர் வீட்டில் துப்பாக்கி வாலிபர் அட்டகாசம்

### பருத்தித்துறையில் பட்டப்பகலில் சம்பவம்

(புலோலி)

ஐக்கியதேசியக் கட்சியின் வடபிரதேச அமைப்பாளர் திரு கே கணேசலிங்கத்தின் இல்லத்திற்கு பயங்கர ஆயுதங்களுடன் இளைஞர்கள் கோஷ்டி ஒன்று சிறிது நேரம் அட்டகாசம் புரிந்த பின்னர் பொலிஸாரின் தலையீட்டை அடுத்து தப்பி ஓடிவிட்டது.

நேற்றுக்காலை 8-30 மணிக்கு நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது:-

நேற்றுக்காலை பருத்தித்துறையில் உள்ள திரு. கணேசலிங்கத்தின் இல்லத்தில் இன்று நடைபெற உள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்ற சமயத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றது. திரு. கணேசலிங்கம் தலைமையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

'சோமசெற்' கார் ஒன்றில் வந்த இளைஞர்கள் எட்டுப்பேர் இரு கோஷ்டிகளாகப் பிரிந்து ஒரு கோஷ்டி அவ்வீட்டின் முன் நின்ற கார்களின் டயர்களைக் கத்திகளால் குத்திக் கிழித்தும் காற்றைத் திறந்துவிட்டுக்கொண்டிருந்த வேளையில் வேறு சிலர் தொலைபேசி வயர்களைத் துண்டித்தனராம்.

இதே சமயம் ஒரு சில இளைஞர்கள் வீட்டின் அறை ஒன்றை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை அடுத்து வீட்டில் காவலிருந்த பொலிசார் வெளியே வந்து இளைஞர்களை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்ததை அடுத்து இளைஞர்கள் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிகிறது.

### ஒருவருக்கு காயம்

இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களின்போது பருத்தித்துறைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளானார். இவரது தொடையிலும் தோளிலும்

[6ம் பக்கம் பார்க்க]

# விகிதாசார அடிப்படையிலான முதலாவது குட்டிப் பொதுத்தேர்தல் இன்று

## 43 ஊராட்சி மன்றங்களில் 10 கட்சிகள் மோதுகின்றன

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி மாநகரசபைகள் உட்பட 43 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.**

இலங்கைச் சரித்திரத்தில் முதல் தடவையாக விகிதாசார அடிப்படையில் நடைபெறும் இத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, இடதுசாரி ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், மகாஜன எக்சத் பெரமுன, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் மக்கள் விடுதலை முன்னணி உட்பட 22 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

9 மாநகரசபைகளுக்கும் 34 நகரசபைகளுக்கும் நடைபெறும் இத்தேர்தலில் 9 லட்சத்து 93 ஆயிரத்து 700 வாக்காளர்கள் வாக்களிக்கின்றனர். சுமார் 2,500 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

### 8 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பம்

இன்று காலை 8 மணிக்கு 712 வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்களிப்பு ஆரம்பமாகி மாலை 5 மணிவரை நடைபெறும்.

### முதலாவது முடிவு

இக் குட்டிப் பொதுத் தேர்தலின் முதலாவது முடிவு இன்று இரவு 7-30 மணிக்கு வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 43 இடங்களில் ஐ. தே. க போட்டி

இன்று நடைபெறும் 43 உள்ளூராட்சி மன்றங்களிலும் ஐ தே க போட்டியிடுகிறது. சுதந்திரக் கட்சி 37 மன்றங்களிலும், தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கிலுள்ள 6 மன்றங்களிலும் தமிழ்க்காங்கிரஸ் 3 மன்றங்களிலும் இடதுசாரி முன்னணி 29 மன்றங்கட்கும் மகாஜன எக்சத் பெரமுன 4 மன்றங்களிலும் இ தொ கா 1 இடத்திலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன

### ஆணையாளர் வேண்டுகோள்

இத்தேர்தல் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் நெருக்கடியைத் தவிர்க்க வாக்காளர்கள் நேரகாலத்துடனேயே வாக்குகளை அளிக்கும்படியும் தேர்தல் ஆணையாளர் திரு எம் ஏ பியசேகரா பொதுமக்களை வேண்டியுள்ளார். [இ]

## நள்ளிரவு நேரத்தில் வேட்பாளரை தேடிச்சென்ற துப்பாக்கி இளைஞர்கள்

[புலோலி]

நள்ளிரவு நேரத்தில், வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற துப்பாக்கி இளைஞர் இருவர் வீட்டிலிருந்தவரைப் பயமுறுத்திவிட்டு வெளியேறிய சம்பவம் பருத்தித்துறையில் நிகழ்ந்துள்ளது.

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்கு நேற்று நள்ளிரவுக்குச் சற்றுப்பின்னர் சைக்கிளில் சென்ற இரு துப்பாக்கி இளைஞர்கள் வீட்டுக் கதவைத் தட்டி குறிப்பிட்ட அபேட்சகரைத் தேடியதாகவும் அங்கு நித்திரையாகியிருந்த ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் சத்தம் கேட்டு எழுந்து குறிப்பிட்ட அபேட்சகர் வீட்டுக்கு வரவில்லை என்றும் அமைப்பாளர் வீட்டில் தங்கியிருக்கலாம் என்று தெரிவித்ததாகவும் அதனைத் தொடர்ந்து அந்த இளைஞர்கள் ஆத்திரம் கொண்டு பேசியதாகவும் வீட்டைவிட்டு சைக்கிளில் வெளியேறியபோது துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமாலைவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## கிளர்ச்சிகளை அடக்க புதிய ரக விமானம்

[கொழும்பு]

நாட்டில் ஏற்படும் கிளர்ச்சி நடவடிக்கைகளை முறியடிக்கும் விதத்தில் கிளர்ச்சிகளை முறியடிக்கும் புதிய ரக விமா

[6ம் பக்கம் பார்க்க]

மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

Mackinnon Travel Service (Ceylon) Ltd.

தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயங்கிவருகிறது.

இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- சுற்றுலாக்கள்
- பாஸ்போட்
- விசா

இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்குசெய்துகொள்ளலாம். உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட். ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினொன் டிறவல் சேர்விஸ (இலங்கை) லிமிட்.
8, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

2424

## யாழ். மாவட்டத்தில் முறையற்ற வகையில் ஆசிரியர் இடமாற்றங்கள்

### உடன் நிறுத்துமாறு பண்டிதர் ஜனாதிபதியைக் கோரியுள்ளார்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் முறையற்ற வகையில் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுகிறார்கள் இத்தகைய இடமாற்றங்களை உடன் நிறுத்துவதோடு இத்தகைய இடமாற்றங்களுக்கான காரணத்தை அறியத்தருக

இவ்வாறு கோரும் அவசரத்தந்தி ஒன்றை ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம், ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இத்தந்தியின் பிரதிகள் கல்வி அமைச்சர் திரு நிசங்கா விஜயரத்தினவுக்கும் கல்வி அமைச்சின் செயலாளர் திரு வி எம் பி பி தஸநாயக்கா, உதவிச் செயலாளர் திரு எம் எம் டி எஸ் கருணாரட்ண ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தத் தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது யாழ்மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படும் ஆசிரியர்களின் இடமாற்றங்கள் முறையாகச் செய்யப்படவில்லை. எனது தொகுதியிலிருந்து புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த திருவாளர்கள் க. விஜயகுமாரன், பு. வசந்தகுமார் ஆகியோர் வெளிமாகாணத்தில் ஏழுவருடங்கள் வேலைசெய்த பின் இவ்வாண்டு ஜனவரியில் முதல்முறையாக எனது தொகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்கள். இவர்களுக்கும் இப்போது இடமாற்ற உத்தரவு வந்துள்ளது இடமாற்றங்கள் எந்தவிதகாரணமுமின்றி எழுந்தமானத்தில் செய்யப்படுகின்றன என்பதை இது நிரூபிக்கின்றது. ஆசிரி

[6ம் பக்கம் பார்க்க]

PERIODICALS DIVISION LIBRARY

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கூடுதல் பயன்தரக்கூடிய நல்ல இன செவ்விளநீர் தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 2469

இறைச்சிக்குரிய கோழிகள் (BROILER) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அண்ணா பாம், இணுவில் 2471

தலமணிலட்டி, தெல்லிப்பழையில் 9 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். S. N. சில்வெஸ்ரர் 601/8 கவலரோட், பாமன்கடை, வெள்ளவத்தை. 2435

புதிய எலெக்ரோலக்ஸ் (Electrolux) குளிர்சாதனப் பெட்டி 8 கன அடி. இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது. சிவபாலன், நவாலி கிழக்கு, மானிப்பாய். 2177

நல்லூரில் ''அரசேகரி வளவு'' என்றழைக்கப்படும் நாலு நிலப்பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு திருமதி டாக்டர் இந்திராணி, ஜயவர்த்தனை வெலிக்கடவத்த 572/5 நாவெலவீதி, ராஜகிரிய. 2440

### தேவை

புடவை வியாபாரம் செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் நேரில் வரவும். சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், 21, நவீன சந்தை, 21, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2482

### பயிற்சி

16-22 வயதுடைய இளைஞர்கட்கு ஒரு வருட விவசாயப் பயிற்சி 1979 ஆனி மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகும். ஊதியம்/ வேதனம் அடிப்படையில் இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் பெற்றோர்/ பராமரிப்பாளர் கடிதத்துடன் 26-5-79 க்கு முன்பு விண்ணப்பிக்கவும். அதிபர், விவசாய நிறுவனம், யாழ். ம. தொ. நு. & வி. நி. மருதனாமடம், சுன்னாகம். 2416

### வாடகைக்கு

நல்ல நிலையில் வியாபாரம் நடைபெறும் கடை தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. இரும்பு, புடவை வியாபாரத்திற்கு தகுந்தது. நேரில் வரவும். 248 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 2483

### சோதிடம்

குறிப்பு பார்த்து பலன் கூறுவதின் மூலம், உங்கள் பிரச்சினைகள் (விவாகம், கல்வி, உத்தியோகம் தொழில் முதலியன) தீர்த்துவைக்கப்படும். KL. M. Krishnapillaiy, ஸ்ரீ ஆதிபராசக்தி சோதிட நிலையம், கந்தசுவாமி கோவிலடி, மாவிட்டபுரம். 2487

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

---

இன்று நினைவு தினம்

# ஒப்பற்ற ஆராய்ச்சியாளர்

## பண்டிதமணி அருளம்பலவனார்

- எஸ். சண்முகரத்தினம் -

வாழ்க்கை வாழ்வதற்காக, வாழ்வாங்கு வாழ்வதற்காக. தனக்கும் தன் தாய்மொழி, தாய்நாடு, பண்பு கலாசாரம் என்பனவற்றுக்கும் பயன்படுமாறு வாழ்வதே வாழ்வாங்கு வாழ்தல். வாழ்க்கைக்கு உறுதுணையாவது தாய நற்கல்வி. சிறந்த மக்கள் தம் நுண்மாண் நுழைபுலம் கொண்டு தாம் கற்ற கல்வியைப் பயனுடையதாக்குவர். சங்க இலக்கிய ஆய்வும் பயன்மிக்கதே. இவ்வாராய்ச்சி மரபுக்கு வழிகாட்டிகளாக இருந்தவர்கள் என தமிழ்நாட்டைச் சேர்ந்த மகாமகோபாத்தியாய கலாநிதி உ. வே. சாமிநாதையரையும் ஈழத்து சைவத் தமிழ் மறுமலர்ச்சியின் தந்தை எனப் போற்றப்படும் ஆறுமுகநாவலரையும் கூறலாம். இம் மரபில் வந்தவரே யாழ்ப்பாணத்து காரைநகரைச் சேர்ந்த சங்கநூற் செல்வர் பண்டிதமணி சு. அருளம்பலவனார். இவருக்கு இத்துறை ஊக்கத்தை அளித்தவர் இவர் கல்வி பயின்ற காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை ஆசிரியராக இருந்த ஸ்ரீமத் சி. சுப்பிரமணியதேசிகர் ஆவர். ஓவியக்கலை, இசைத்துறை போன்றவற்றிலும் மிகுந்த ஈடுபாடுடையவராய் இருந்த இவர் ஆசிரியராய் இருந்து கல்விப்பணியாற்றினார். அவர் ... விபாரும் ஆசிரியப்பணியை மேற்கொண்டமையால் அவரின் ஆராய்ச்சித்துறைக்கு வேண்டிய முறையில் பல்வேறு பணிகளைப் பொறுமையோடும் ஒழுங்காகவும் புரிந்தார். இதனால் அவரின் ஆராய்ச்சித்துறை மேன்மேலும் வளம் பெற்றது.



பண்டிதமணி சலியாத உழைப்பு உடையவர், அவரது உழைப்பின் பயனாக அவரால் எழுதப்பட்ட ஈடுஇணையற்ற செயற்கரிய செயலாக வெளிவந்த ஆராய்ச்சியுரைகள் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப் பத்து, திருவாசகம் என்பனவாகும். இவ்வுரைகள் எழுதும் காலத்தும் வெளியிடும் காலத்தும் பல இன்னல்கள் ஏற்பட்ட போதிலும் மனச்சலிப்பின்றி தன்பணியில் ஈடுபட்டார். 'கடமையைச் செய் பயனை எதிர்பாராதே' என்ற சித்தாந்தத்தின் இலக்கியமாக பண்டிதமணி திகழ்ந்தார். தனது உழைப்பினாலேயே தமிழ் மொழியின் எல்லையற்ற வளத்தினை தனது குறுகிய காலத்தில் வெளிப்படுத்தினார். இதன் பயனாக தமிழ் இலக்கிய வரலாற்றில் நிரந்தரமான இடத்தினையும் அழியாப் பெரும்புகழையும் பெறுபவராயினர். அன்னாரின் தமிழ்த்தொண்டு வளமமிக்கது நிரந்தரது. பண்டிதமணி எளிமை, இனிமை, நன்னடத்தை, குருபக்தி, இறைபக்தி, தமிழ்ப்பற்று ஆகியவை எல்லாம் நிறைந்த தமிழறிஞர்.

பண்டிதமணியை ஈழநாட்டு அறிஞர் உலகம் மட்டுமல்லாது தமிழ்நாட்டு அறிஞர்களும் ஒருசேரப் பாராட்டுகின்றனர். பண்டிதமணியின் புலமையும் ஆழ்ந்த தெளிந்த அறிவும், ஆராய்ச்சிப்பாங்கும் அவர்களை அவர்பால் ஈர்த்தன. குறுகிய காலப் பகுதியில் அன்னார் ஆற்றிய தொண்டினைத் தமிழுலகம் என்றும் மறக்கமுடியாது. அவரின் ஆராய்ச்சி நூல்கள் தமிழ்கூறும் உலகுக்கு ஒளி கூட்டுவனாக. [அ]

### யாருடைய உடை?

புதியபாவாடை ஒன்றும் இரு சிறிய 'பங்கி'களும் கொண்ட பார்சல் ஒன்று சுந்தர்மடம் பலாலிவீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடுகாரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

கமநலச்சேவை நிலையம்.
விவசாய-இரசாயனப் பொருட் களஞ்சியம், உரக்களஞ்சிய திருத்த வேலைகள் சம்பந்தமாகக் கேள்விப்பத்திரங்கள் கோருதல்

இடங்கள்: வேலணை, தொல்புரம், வட்டுக்கச்சி.

தகுதி: கட்டிட நிர்மாண வேலைகளில் அனுபவமுள்ளவர்கள்.

கேள்விப்பத்திரங்கள் வழங்குதல்: 4-6-79 பகல் 12-00 மணி வரைக்கும்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றல்: 5-06-79 காலை 10-30 வரை.

கேள்விப்பத்திரங்களை ரூபா 10/- வைப்புப்பணம் கட்டி கமநலச் சேவைகள் சுந்தோர் யாழ்ப்பாணச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. பரமலிங்கம்,
உதவி ஆணையாளர்,
கமநலச் சேவை இலாகா,
யாழ்ப்பாணம்
2485

---

# கேள்வி பற்றிய அறிவித்தல்

## கரிக்கட்டுமூலை தெற்கு கிராமசபை

பின்வரும் வேலைகளான சீல்வைத்த கேள்விகள் கரிக்கட்டு மூலை தெற்கு கிராமசபை விசேட ஆணையாளரால் 5-6-1979 பிற்பகல் 4-00 மணிவரை பதிவுத்தபால் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும்.

### வேலையின் விபரம்

| வேலையின் பெயர் | கேள்விப் பணம் | பத்திரப் பணம் |
|---|---|---|
| 1. சொக்குத்தொடுவாய் விளையாட்டு மைதானம் | 50/- | 25/- |
| 2. முகத்துவாரம் கடற்கரை ரோட்டு | 50/- | 25/- |
| 3. சொக்கிளாய் கடற்கரை ரோட்டு | 50/- | 25/- |
| 4. சிவந்தமுறிப்பு தட்டாமலை நவாலயம் சிவாலயம் ரோட்டு | 100/- | 25/- |

கேள்விப்பத்திரம் கரிக்கட்டுமூலை தெற்கு கிராமசபை அலுவலகத்தில் 29-5-79-ந் திகதி பகல் 12-00 மணிவரை உரிய பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்தின் ஓர் பிரதி வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் சீல்வைத்த பதிவுத்தபால் மூலம் குறித்த திகதியில் அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரப் பணம் திரும்பப்பெற முடியாது.

மேலும் தேவையான விபரங்களை கரிக்கட்டுமூலை தெற்கு கிராமசபையின் கந்தோர் நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்
க. தேவசிகாமணி
விசேட ஆணையாளர்.

கிராமசபை,
கரிக்கட்டுமூலை தெற்கு,
குருநாட்டுக்கேணி,
சொக்கிளாய்.
2486

---

## பட்டமும் பதக்கமும்

[யாழ்ப்பாணமும்] நாதஸ்வரவித்துவான் வி. ஏ. ராமையாபிள்ளைக்கு, தொண்டமனாறு இளைஞர்கள் 'இசைக்குயில்' என்ற பட்டத்தைச் சூட்டி, தங்கப் பதக்கம் வழங்கிக்கௌரவித்தனர். (உ வி)

---

ஏழாலை வடக்கு
## மின்னொளியில் இன்றைய கரபந்தாட்டம்

[தெல்லிப்பழை]

ஏழாலைவடக்கு கலாநிதிசன சமூக நிலையத்தின் கலாநிதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடாத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மோதும் கழகங்கள்:-

6 வீரர் போட்டியில் வளர்மதி வி. கழகத்துடன் ஈஸ்வரி வி. வி. கழகம் 'பி'யும், ஈஸ்வரி வி. கழகம் 'ஏ'யுடன் விக்கினேஸ்வரா இளைஞர் வி. க. வும், ஸ்ரீ விநாயகம் வி. க. வுடன் ஞானவைரவர் ச. ச. நிலையமும் மோதவிருக்கின்றன.

4 வீரர் போட்டியில் அண்ணா வி. க 'பி'யுடன் ராஜன் வி. க. வும், ஈஸ்வரி வி. க. 'பி' யுடன் இடைக்காடு ச. ச. நி யும், அண்ணா வி. க. வுடன் இந்து வி க வும், மோதுகின்றன.

---

உ
சிவமயம்

## யாழ். இந்துமகளிர் கல்லூரி பெற்றோர் - ஆசிரியர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

தலைவர்: செல்வி ப இராமநாதன்.
இடம்: யாழ். இந்துமகளிர் கல்லூரி.
காலம்: 23-5-1979 புதன்கிழமை மாலை 4-00 மணி.
நோக்கம்: பாடசாலை அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணமும் நிர்வாக சபை அங்கத்தவர்களைத் தெரிதலும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் பழைய மாணவிகள் யாவரும் சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இ. கனகலிங்கம்.
காரியதரிசி

2490

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

இல: சடு/463

1 வல்லிபுரம் சண்முகராசாவும் பெண்
2. நாகேஸ்வரியும் கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்
—வாதிகள்

எதிராக

1. சின்னத்துரை விஜயகுமாரி
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்
—பிரதிவாதி

யாழ்ப்பாண டிஸ்திரிக் கோட்டின் 463ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1979ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி (29-5-79) செவ்வாய்க்கிழமை 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி 5900/- மேலும் 4000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10% வழக்கு அணைத்த திகதியாகிய 10-5-77ல் இருந்து முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வட்டியும் வழக்குச் செலவு ரூபா 500-90 சதம்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று. உரும்பிராயிலுற ''பண்டித்தல்'' பர நில இலா. 15 இதில் கிழக்குப்பக்கமாக பர. நில இலா. 12½ இதில் மேற்குப்பக்கமாகவும் மிகுதியில் வடக்குப் பக்கமாகவும் அறுதி விற்ற பர நில. இலா 9 3/8 நீக்கி மிகுதி தெற்குப் பக்கமாகப்பரப்பு நில இலா மூன்றுடன் எட்டில் ஒன்று (பர நில. இலா. 3 1/8 இந்தப் பரப்பு மூன்றுடன் எட்டில் ஒன்றுக்கும் எல்லை கிழக்கு சுயிரன் தவஞானத்தினுதனம் வடக்கு சின்னத்துரை நாகேசுவினுதனம் மேற்கு பொன்னம்பலம் அருளானந்தத்தினுதனம் தெற்கு ரோட்டு இன்னும் வடக்கெல்லையாதனத்திற்கு இக்காணியின் கிழக்கெல்லையருகால் தெற்கேயிருக்கும் ரோட்டுக்குப் போக்குவரவு செய்யப்பட்ட பத்து அடி அகலப்பாதை நிலம். புறநிலைலாக மிகுதி அடங்கலும் உறுதிவு கே 305/12

மு. விஜயராசன்
நீதிமன்ற விற்பனவு, விலைமதிப்பாளையாளர்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
4-5-79
2488

## மக்கள் கருத்து

### பருத்தித்துறை பஸ்நிலையத்தில் மாணவர் அவதி

15-5-79 திகதியன்று பருத்தித்துறைக் கல்வி வட்டார விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றிவிட்டு வீடு திரும்புவதற்காகப் பருத்தித்துறை பஸ் நிலையத்தை வந்தடைந்த வெற்றிலைக்கேணி பரமேஸ்வராகனிஷ்ட மகாவித்தியாலய ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும், மாலை 6 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து தாயளைடிவரை சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்ஸில், தாம் சென்றடைய வேண்டிய ஆழியவளைக்கு செல்ல முடியாததினால் இரவு 8 மணிக்குப் பருத்தித்துறையிலிருந்து ஆழியவளைக்குச் செல்லும் பஸ்ஸுக்காக பஸ்நிலையத்தில் காத்துநின்றனர்.

இரவு 8 மணிக்குப் பருத்தித்துறையிலிருந்து புறப்பட வேண்டிய ஆழியவளை பஸ் இரவு 8-30 மணியாகியும் பஸ் நிலையத்தை வந்தடையவில்லை இதுபற்றி மேற்படி பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் நேரப் பதிவாளரை விசாரித்தபோது இதற்கு முதல் சேவையில் ஈடுபடுத்திய பஸ் திரும்பிவரவில்லையென்று கூறினார். வேறொரு பஸ்ஸை நேரம் தாமதமாகியும் கூட சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காததினால் ஆசிரியர்கள் டிப்போவுக்குச்சென்று தங்களது நிலையினை எடுத்துக்கூறினார்கள். அதற்கு அங்கிருந்த அதிகாரிகள் இன்னும் 15 நிமிடங்கள் பார்த்துவிட்டு வேறு ஒரு பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்துவதாகக் கூறினார்கள். எனினும் இரவு 9 மணி ஆகியும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பஸ் பஸ்நிலையத்தை வந்தடையவுமில்லை, வேறொரு பஸ் சேவையில் ஈடுபடுத்தப்படவுமில்லை. முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பஸ் இரவு 9-15 மணியளவில் பஸ் நிலையத்தை வந்தடைந்து. பின்பு டிப்போவுக்குச் சென்று திரும்பிவந்து இரவு 9-30 மணிக்கே பஸ்நிலையத்தை விட்டு ஆழியவளையை நோக்கிப் புறப்பட்டது. டிப்போ அதிகாரிகளின் அசிரத்தையின் காரணமாகவும், உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, முள்ளியான் ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற சுமார் மூவாயிரம் வாக்காளரின் வசதிக்கேற்ற முறையில் அமையாத ஒழுங்கற்ற நேரசூசியின் காரணமாகவும் சுமார் 40 மாணவ மாணவிகளும் மற்றும் பிரயாணிகளும் மூன்றரை மணித்தியாலங்களாக பஸ் நிலயத்தில் காவல் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய களைப்புடனும் பசியுடனும் இரவுநேரத்தில் மாணவ, மாணவிகள் நடுவீதியில் நின்றதைக் கண்டும்கூட டிப்போ அதிகாரிகளின் மனம் இழகவில்லை

இரவு 9-30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து புறப்பட்ட ஆழியவளை பஸ் இரவு 11 மணியளவிலேயே ஆழியவளையைச் சென்றடைந்தது. அங்கிருந்து ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் முள்ளியானிலிருக்கின்ற தங்களுடைய வீடுகளுக்குச் சென்றடைய 12 மணி ஆகிவிட்டது

இவ்வாறான நிலை இப்பகுதி மக்களுக்கு அடிக்கடி ஏற்பட்டு வருகின்றது இப்பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இரண்டு பஸ்களில் ஒன்று சென்ற 12-5-79 திகதியன்று தொடக்கம் பழுதடைந்துவிட்டதனால் காலையில் இரண்டு சேவைகளும் மாலையில்இரண்டு சேவைகளும் மட்டுமே நடத்தப்படும் ஆழியவளை பஸ்சேவை மிகவும் மோசமடைந்து காணப்படு-

# “காந்தியை மகாத்மாவாக்கியது அரிச்சந்திரன் நாடகமே!”

## யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் ஆறு. அழகப்பன்

(யாழ்ப்பாணம்)

“ஒரு நாடகபாத்திரம் எப்படி அமைய வேண்டும் என்று நாம் பார்க்க வேண்டுமாயின், கம்பன்படைத்த அநுமானையும்இராமனையும்பார்க்க வேண்டும். அநுமானை வணங்குகின்றவர்கள் அவன் உருவத்தைபல்ல உள்ளத்தையே வணங்குகின்றனர். முருகனின் ஆறுமுகங்களில் எந்த முகத்தைப் பார்த்தாலும் அழகாய் இருக்கும். ஆனால் அநுமானின் முகம் அப்படிச் சொல்வதற்கில்லை. இராமாயணத்தில் இலட்சுமணன், பரதன் போன்ற பாத்திரங்கள் அதிகம் பேசினாலும் அநுமானையே சொல்லின் செல்வன் எனக் கம்பர் வர்ணிக்கின்றார். ‘கண்டனன் கற்பினுக் கனியை’ என்று கூறியதன் மூலம் அநுமான் சொல்லின் செல்வனாகிறான்”.

மேற்கண்டவாறு அண்மையில் பல்கலைக்கழக துணைப் பேராசிரியர் ஆறு. அழகப்பன் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ்மன்ற ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்தியபோது குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. தமது உரையில் அவர் மேலும் கூறியதாவது:

ஒருமனிதன் பதவியை இழக்கும்போதும், மனைவியை இழக்கும் போதுதான் கவலையின் உச்சத்தை அடைகிறான் இராமன் இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் நிலைகலங்கவில்லை இதனால்தான் இராமனைத் தெய்வமாக மதிக்கிறோம். ஒரு நாடக பாத்திரம் எப்படி அமையவேண்டும் என்பதற்கு கம்பன் படைத்த எடுத்துக்காட்டாக இராமன் அமைகின்றான்.

“ஆண்மை என்பது எது? அயலான் மனைவியை விரும்பாத தன்மைதான் பேராண்மை என வள்ளுவன் கூற்றை இராவணன் மேல் ஏற்றி அப் பாத்திரத்தைப் படைத்துள்ளார்.

“உண்மைக் கலைஞன் யார்? இளமையும் அழகுமுடைய பிரதான பாத்திரங்களையே ஏற்று நடிக்க விரும்புவர். ஆனால் டி. கே. சண்முகம் தனது 41 வயதிலே எழுபது வயது ஔவையாக நடித்தார் அப்படி நடிப்பதற்கு உருவை மாற்றவேண்டும், குரலை மாற்ற வேண்டும் ஆயிரந் தடவை மேடையேற்றப்பட்ட நாடகத்தில் 3000 மணிநேரம் ஔவையாக நடித்தார் இவர் தான் உண்மைக் கலைஞர்

“நாடகத்தைப் போன்ற ஆற்றல்மிக்க கலை வேறெதுவுமில்லை நாடகம் பாமரமக்களின் ‘பல்கலைக்கழகம்’ சாதாரண காந்தியை அரிச்சந்திரன் நாடகம்தான் மகாத்மாவாக்கியது நாடகம் எழுத விரும்புபவர்கள் பரிதிமாற்கலைஞரின் நாடகவியலைப் படிக்கவேண்டும்.

“நாடகப் பிரதிகள் இல்லை என்று கூறப்படுகின்றது ஆண்டுதோறும் 800 தமிழ் நூல்கள் வரை வெளிவருகின்றன. அவற்றில் எட்டிலொன்று நாடக நூலே. நாடகத்தின் பரிணாமவளர்ச்சியை நாம்பார்க்கவேண்டும்எட்டுமணி நேரம் ஆடப்பட்ட நாடகம் மூன்று மணிக்கு குறைக்கப்பட்டுள்ளது பபூன். விதூஷகன் போன்ற பாத்திரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. பாட்டுக்களின் தொகையும் குறைக்கப்பட்டுள்ளது. நீண்டநேரம் வசனம் பேசுகின்றமுறையும் குறைந்து நடிப்பிற்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது. ஒலி, ஒளி, மேடையமைப்பு என்பவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. நல்ல கருத்துடைய நாடகங்களையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.



“கலையரசு சொர்ணலிங்கம் மாபெரும் கலைவேந்தர். அவரைக் காண்பது நாடகக் கலையைக் காண்பது போன்றதாகும்” என்று குறிப்பிட்டார்.

# இன்று நடைபெறும் ‘குட்டிப் பொதுத்தேர்தல்’

(கொழும்பு)

இன்று 19ம் திகதி சனிக்கிழமை நாடு முழுவதுமுள்ள 9 மாநகரசபைகளுக்கும் 34 நகரசபைகளுக்குமான தேர்தல் நடைபெறுகிறது. காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வாக்களிப்பு நடைபெறும்.

வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்கள் தமது வாக்காளர் அட்டைகளைத் தம்முடன் வாக்குச் சாவடிகளுக்கு எடுத்துச் செல்லும்படி கோரப்பட்டுள்ளனர். வாக்காளர் பட்டியலில் வாக்காளர் பெயரை இலகுவில் கண்டுபிடிப்பதற்கு இந்தஅட்டை உதவியாய் இருக்கும். அத்துடன் வாக்காளர்கள் தமது அடையாள அட்டைகளையும் தம்முடன் எடுத்துச் செல்லும்படி கோரப்பட்டுள்ளனர். இவை இல்லாதபட்சத்திலும் வாக்காளர்பட்டியலில் பெயர் இருக்குமானால் எவரும் வாக்களிக்கமுடியும்.

சாராயத்தவறணைகள், மதுபானக்கடைகள் யாவும் இன்றுடன் மூன்று நாட்களுக்கு மூடப்பட்டிருக்கும். மது போதையில் பொது இடங்களில் தகாதமுறையில் நடந்து கொள்பவர்களைப் பொலிசார் கைது செய்வர்.

வியாழக்கிழமை நள்ளிரவு முதல் பொது இடங்களில் தேர்தல் தொடர்பான பிரசுரங்களை விநியோகிப்பது தேர்தல் சட்டத்தின்படி ஒரு குற்றமாகக் கருதப்படும் என்று பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் அமைதியாக நடைபெற்று முடிய ஒத்துழைப்பு வழங்கும்படி பொதுமக்களை தேர்தல் ஆணையாளர் திரு. எம் ஏ. பியசேகர கேட்டுள்ளார்.

### யாழ்ப்பாணம் (மாநகர சபை)

யாழ்ப்பாண மாநகர சபைக்கு 23 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக இன்று சனிக்கிழமை தேர்தல் நடைபெறுகிறது தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்பன தமது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. நியமனப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வேட்பாளர்களின் பெயர்கள் வருமாறு:

ஐக்கிய தேசியக் கட்சி:

1 ஜோர்ஜ் இராஜசூரியர், 2 ஞானப்பிரகாசம் நல்லையா, 3 காசிநாதர் சபாபதிப்பிள்ளை நடராஜா, 4 சுல்தான் அப்துல் காதர் முபீன், 5 அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியான் பிள்ளை, 6 பொன்னுசாமி கனகசபாபதி, 7 பரமேஸ்வரன் யோகேஸ்வரன், 8 மடுதீஸ் செபஸ்ரியாம்பிள்ளை மைக்கேல் இராஜா, 9 குமாரு சதாசிவம், 10 வைத்திலிங்கம் திருநாவுக்கரசு, 11 இராஜதுரை கனகலிங்கம், 12 கனகா பொன்ராஜா, 13 வல்லிநாக நாதி, 14 நாகமுத்து அரசரத்தினம், 15 ஐதுரூஸ் சாகுல் ஹமீட், 16 ஆழ்வான் மாணிக்கம், 17 சின்னத்தம்பி பத்மநாதன், 18 வல்லிபுரம் இவபாலசிங்கம், 19 எட்வேட் இராஜரத்தினம் ஆசீர்வாதம், 20 றிச்சாட் சாமுவேல் சிவரத்தினம், 21 அப்பையா தர்மகுலசிங்கம், 22 நாகரத்தினம் விசுவநாதன், 23 அந்தோனி சிலுவைராஜா, 24 மத்தியூஸ் அலெக்சாண்டர், 25 ஐயம்பிள்ளை கந்தசாமி, 26 சாகுல்ஹமீட் கமால் 27 சுல்தான் அப்துல் காதர் அப்துல் கபூர், 28 சின்னத்துரை நடராஜா, 29 மிக்கேர்சின்கம் அமிர்தவாசம், 30 கந்தசாமி தர்மகுலசிங்கம், 31 திருநாவுக்கரசு தருமலிங்கம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி:

1 இராசா விசுவநாதன், 2 பிலிப்பு பிரான்சிஸ் சேவியர், 3 மனுவேற்பிள்ளை அலோசியஸ், 4 நாகலிங்கம் தர்மலிங்கம செல்லத்துரை, 5 இன்னத்தம்பி தியாகராசா, 6 செல்லப்பா குமாரவேலு, 7 ஆறுமுகம சோதிலிங்கம, 8 யா. ஷா. முஹிதீன் பிச்சை, 9 சோமசுந்தரம சிவரத்தினம், 10 யோக்கியம் அலெக்சாண்டர் செல்வநாயகம், 11 இளையதம்பி முத்தையா, 12 மனுவல் எஸ். பிரியல், 13 தம்பு கந்தையா, 14 சுந்தரம்பிள்ளை சண்முகராஜா, 15 ஆறுமுகம் துரைராசசிங்கம், 16 ரெஸீல் முகம்மது இமாம், 17 கப்பன் ஆறுமுகம், 18 செபஸ்தியாம் பிள்ளை எட்வேட், 19 ஹபீப் மொகமட் சாகுல் ஹமீத், 20 மயில்வாகனம் சுந்தரலிங்கம், 21 குசைப்பிள்ளை சிறில், 22 கந்தவனம் சண்முகநாதன், 23 சயித்தான் நீக்கிலாஸ் ஆசீர்வாதம், 24 கனகரத்தினம் முருகரத்தினம், 25 கந்தையா கனகலிங்கம, 26 நல்லதம்பி மனோகரன், 27 செபஸ்தி அமிர்தநாதன் 28 முத்துக்குமாரு ஜெகதீசன், 29 செல்லையா மகேஸ்வரன், 30 நீ. அடைக்கலம் அருளானந்தம சேவியர், 31 வேலுப்பிள்ளை அப்பையா.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி:

1 அம்பலவாணர் வயித்திலிங்கம், 2 முத்து கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம், 3 இராமலிங்கம் இராமுப்பிள்ளை பூபாலசிங்கம், 4 சிவசம்பு நடராசா, 5 சிவனடியார் இராசதுரை, 6 அந்தோனி குசை, 7 சேகு முகிதீன் முகம்மது சுல்தான், 8 இராசரத்தினம் ஜெயேந்திரா, 9 யோசேப் டொமினிக் ஜீவா, 10 ஹர்மானிஸ் சிறிவர்த்தன லியனகே, 11 யோகராணி தர்மலிங்கம், 12 முத்து கோபாலன் இல்லைநாயகம், 13 நடராசா தேவதாசன், 14 சங்கரன் குமாரு ஜோதிபால, 15 சா முகம்மது மீராசாகிபு, 16 கோவிந்தர் பொன்னுத்துரை, 17 டொமினிக் அன்ரன் அஞ்சலோ, 18 தங்கரத்தினம் கந்தையா, 19 மத்தேயு கிளமன்ஸ் யேசுதாசன், 20 கந்தர் பொன்னுத்துரை, 21 சுப்பிரமணியம் தியாகராசா, 22 ஞானமுத்து அலெக்சியஸ், 23 டெனிஸ் குசைராசா, 24 நல்லியர் அருளானந்தம், 25 முருகேசு சந்திரசேகரம், 26 கிறிஸ்ரியன் யோசேப் சத்தியதாசன், 27 சண்முகம் இராமநாதன், 28 சண்முகராசா யோகராசா, 29 கனகசிங்கம் செல்வராசா, 30 டேவிட் லிகோரி, 31 நாகேந்திரம் தெய்வேந்திரம்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

1 அன்ரன் லிகோரி ஏபிரஹாம் 2 திருமதி சாமிநாதா அந்தோனியா, 3 மீரான்கண்டு முகம்மது காசிம், 4 இராசநாயகம் மரியாம்பிள்ளை 5 செபஸ்தி யேசுதாஸன், 6 துரைராசா சாந்திக்குமார், 7 வேலாயுதம் கனகலிங்கம் 8 சரவணமுத்து செல்வராசா, 9 சந்தியா கபிரியேல் செபஸ்தியாம்பிள்ளை, 10 சோதிநாதன் சிவசுந்தரம், 11 நவரத்தினம் ஸ்ரீ நிவாசன், 12 அப்துல் ரஹீம் முசாஹூத், 13 செல்லையா சுந்தரலிங்கம். 14 கந்தையா சற்குணநாதன், 15 சோமசுந்தரம் சிவரத்தினம், 16 கந்தையா திரவியம், 17 யோகசாமி ஜெயபாலன் 18 செல்வரத்தினம் அமிர்தநாதன், 19 கனகசபாபதி விசாகரத்தினம், 20 கணபதிப்பிள்ளை மகேஸ்வரன், 21 பி பிரான்சிஸ் சேவியர் செல்வநாதன், 22 தியாகராசா அருணாசலம், 23 கணையா சூரியகுமார், 24 அப்பிரட் சற்பேட், 25 இராசதுரை கணேசராசா, 26 சின்னத்துரை திருநாவுக்கரசு, 27 துரைசாமி மாயரத்தினம், 28 முஹம்மது மீராசாஹிபு நிஸ்ஸதீன் 29 குசைப்பிள்ளை இராசையா 30 சொக்கலிங்கம் விமலதாசன் 31 கந்தையா பத்மநாதன்.

*(மக்கள் கருத்து — தொடர்ச்சி)*

-கின்றன.

இப்பாதை பஸ்சேவையின் சீர்கேடுபற்றி பலமுறை பருத்தித்துறை டிப்போ அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தும்கூட எதுவித பயனும் கிடைக்கவில்லை. இது பற்றி வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் கவனமெடுப்பாரா?

அ. சா. அரியகுமார்,
[செயலாளர், ஆழியவளை கிராம அபிவிருத்திச்சங்கம்]

# அமெரிக்க - சோவியத் உடன்படிக்கை வளர்முக நாடுகளுக்கு நன்மையளிக்கும்

நியூயார்க், மே 18

நீண்டகாலமாக காத்திருந்த இரண்டாவது கேந்திர இராணுவ ஆயுதக் கட்டுப்பாடு உடன்படிக்கையை (ஸால்ட்-2), அமெரிக்காவும் சோவியத்யூனியனும் விரைவில் கைச்சாத்திடுமென்று "இந்தியா நியூஸ் அன்ட் ஃபீச்சர்ஸ் அலையன்ஸ்" செய்தி ஸ்தாபனத்தின் அரசியல் விமர்சகர் விநோத் மேத்தா கருத்துவெளியிட்டுள்ளார், நவீன அரசியல் பற்றிய பல நூல்களின் ஆசிரியருமான மேத்தா மேலும் இதுபற்றி எழுதுவதாவது:

இரண்டாவது உலகமகா யுத்தத்துக்குப் பின்னர் ஏற்பட்ட கெடுபிடி யுத்தகாலத்தில், ஆயுதப்போட்டி ஆரம்பமானது. இன்றுங்கூட உடன்படிக்கையை எதிர்க்கும் சக்திகள் உண்டு, உடன்கடிக்க உருவாவதை தோற்கடிக்க 15 லட்சம் டாலர் பிரச்சாரத்திற்கு செலவிடப்பட்டதாகவும் செனட்சபையின் அங்கீகாரம் பெறும் கட்டம் வந்ததும் அங்கே அது நிறைவேறாது தடை செய்ய 12 லட்சம் டாலர் செலவிடப்பட இருப்பதாகவும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன அமெரிக்காவும் சோவியத்யூனியனும் திரட்டிவைத்திருக்கும் போர் ஆயுதங்கள் முழு உலகத்தையும் சர்வநாசமாக்கப்போதுமானதாகும். மேலும் இரு நாடுகளும் சமபலமடைந்துள்ளன. ஆகவே ஆயுதப் போட்டியை நிறுத்திவிட்டு பொருளாதாரப் பிரச்னைகளை தீர்ப்பதில் கவனம் செலுத்துவது பரஸ்பரம் பிரயோசனமானதாக இருக்குமென்று கருதப்படுகிறது.

உதாரணமாக, 1960—1975 காலகட்டத்தில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த அபிவிருத்தியடையும் நாடுகளின் ஆயுதசெலவு 1000 கோடி டாலரிலிருந்து 6000 கோடி டாலராக உயர்ந்தது அதாவது ஆறு மடங்கு அதிகரித்தது. இந்த 6000 கோடி டாலரை மூன்றும் உலக நாடுகள் மிச்சப்படுத்தும் பட்சத்தில் சகல குழந்தைகளுக்கும் சகல தொற்றுநோய்களிலிருந்தும் பாதுகாப்பு வழங்கி ஊசி போடலாம்; சகல நாட்டுப்புற மக்களுக்கு ஆரம்பவைத்தியம் வழங்கலாம்; சகல நகரப்புற ஏழை மக்களுக்கும் சாதாரண குடியிருப்பு வழங்கலாம்; போஷாக்கு இன்றி அவஸ்தைப்படும் 20 கோடி குழந்தைகளுக்கு மேலதிக உணவு வழங்கலாம், கர்ப்பிணிகளுக்கு மேலதிக போஷாக்கு வழங்கலாம், 10 கோடி ஆரம்ப பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கலாம், 120 கோடி மக்களுக்கு குடிநீர் வழங்கலாம், உணவு உற்பத்தியை பெருக்கலாம் என்று இந்திய விமர்சகர் மேத்தா எழுதியுள்ளார்.

## விவசாய விழா

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டைத் தொகுதி இளம்விவசாயக் கழகங்கள் ஒன்றிணைந்து வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி திறந்த வெளி அரங்கில் அடுத்த மாதம் விவசாயவிழா வொன்றை நடாத்த இருக்கின்றது.

# யோகேந்திரா நியமனம்: முற்போக்குத் தமிழர் ஜனாதிபதிக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

திரு. யோகேந்திரா துரைசுவாமியையாழ் மாவட்ட அமைச்சின் செயலாளராக நியமித்தமைக்காக முற்போக்குத் தமிழர்கள் சார்பில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவிக்கப்பட்டுள்ளது

சமயோசிதம், விசுவாசம், உத்வேகம் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து கொள்ளும் தன்மை போன்ற குணங்கள் தேவைப்படும் பொறுப்புமிக்க இப்பதவிக்கு இப்போதைய சூழ்நிலையில் திரு யோகேந்திரா துரைசுவாமியைத் தவிர்ந்த வேறு ஒருவரைத் தெரிந்தெடுத்திருக்க முடியாது. அவர் யாழ்ப்பாணத்தின் மதிப்பமிகுந்த ஒரு புதல்வராவார். இவர் மீது அரசுக்கு நம்பிக்கையும் விசுவாசமும் உண்டு அதே சமயம் அறிவு விளக்கமுள்ள தமிழ்மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இவருக்குண்டு.

மாவட்ட அடிப்படையில் பரவலாக்கப்பட்ட பொருளாதார சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தி ஐக்கிய இலங்கை ஒன்றை உருவாக்க அரசு எடுக்கும் முயற்சிகள் வெற்றியடைந்து சகலருக்கும் அமைதியும், அபிவிருத்தியும் சுபீட்சமும் அளிக்கும் ஒரு சகாப்தம் உருவாகும் என்று நம்புகிறோம் இந்த முயற்சிக்கு முற்போக்குத் தமிழரின் ஆதரவு எப்போதும் இருந்துவரும்.

இவ்வாறு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# லெபனன் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்

பெய்ரூட், மே 18

லெபனன் மீது இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல் நடாத்திவருவதாகவும் அங்கு பதட்டநிலை நிலவுவதாகவும் பெய்ரூத்திலிருந்து வரும் செய்தி அறிக்கைகள் கூறுகின்றன.

லெபனனைத் துண்டாடுவதற்கு டெல்அவிவ் மேற்கொண்ட முயற்சிகள் தோல்விகண்டதைத் தொடர்ந்து, இஸ்ரேலுடன் ஒரு தனிவழி உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு லெபனன் அரசில் நிர்ப்பந்தம் கொண்டுவரும் நோக்குடனேயே இஸ்ரேல் இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது

லெபனனின் தெற்குப்பகுதியில் ஒரு 'சுயாதீன ராஜ்ய'த்தினைப் பிரகடனம்செய்யுமாறு லெபனன் பிரிவினைவாதக் கோஷ்டித் தலைவர் எஸ் ஹதாத்தினை, டெல் அவிவ் கேட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லெபனனுக்கு எதிரான இஸ்ரேலின் ஆத்திரமூட்டல்களுக்கு முற்றுப்புள்ளிவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு லெபனன் பிரதமர் ஸெலிம் ஹொஸ் ஐ நா பந்தோபஸ்து சபைக்கு அவசரவேண்டுகோள் விடுத்துள்ளார்.


வாங்கத்தூண்டுவது!

ராற்ருங்வ்

டெலிவிஷன்

12" கறுப்பு வெள்ளை போட்டபிள் மோடல் 12 PD/PC

உலகிலுள்ள மாபெரும்
நிறுவனமொன்றினால்
சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்டு,
போட்டிபோடமுடியாத
விலையில் விற்கப்படுகிறது.



ராற்ருங் PAL 625 B முறையில் மின்சாரத்திலோ,
பாட்டரியிலோ VHF 2-12 UHF 21-69 சனல்களில்
இயங்குவது. நல்ல பலமான பெட்டியில் UHF/VHF
அன்ரா உள்ளடக்கியது.
இதனால் நீங்கள் நன்கு பார்த்து மகிழலாம் ஆகையால்
பிரத்தியோகமாக வெளியில் அன்ரா இணைக்கத்
தேவையில்லை வோல்டேஜ் ஸ்டாபிலைஷர் இணைந்திருப்
பதால் தங்குதடையின்றி சேவை செய்யும்.
வெளியிலோ உங்களின் காரில் பிரயாணம் செய்யும்
பொழுதோ எங்கும் எப்பொழுதும் மகிழ்ச்சி அளிப்பது.
வீடியோ றெக்கோடர் கொண்டது.



நாஷனல் QC குழுவின் பரிசு பெற்றது.
அமெரிக்காவில் அதிக விற்பனையாவது.

விலை ரூ. 1786/-

கட்டுந் தவணைக்குமுண்டு. ஒரு வருட உத்தரவாதம்
விற்பனைக்குப் பின் தொழிற் சாலையில் பயிற்சி அளிக்கப்
பட்டவர்களால் விசேஷ நிபுணத்துவ சேவை.

இப்பொழுது இலங்கையில் விற்பனையாகின்றது.
ஏக வினியோகஸ்தர்கள்:
ஸ்பாக்ஸ் என்ரபிறைசஸ்
21. கேப்பெட்டிபொல மாவத்த, கொழும்பு 5. தொலைபேசி 86186

நாகம்மாள் (கன்னாகம்)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
ஒருதாய் மக்கள்

Rio (Jaffna) Phone: 7667
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in
SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

21-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்)
போன்: 468
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, செளகார்ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
ஈஸ்மன் கலர்
புதிய பிரதி

ஜனத்திரள் அலைமோதும்
2-வது வெற்றி வாரம்
சாந்தி (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
— இப்பொழுது காண்பிக்கப்படுகிறது —
இராஜேந்திர குமார் — இரட்டைவேடம் —
ஹேமமாலினி—பானுரேகா—மற்றும் பலர்
இசை: லக்ஷ்மிகாந்த் பியரேலால்
இனிய இசை, குதிரை ஓட்டங்கள், விறுவிறுப்பு மிகு சண்டைகள்.
லட்சக்கணக்கான ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான படைப்பு.
"கோரா அவுர் காலா"
ஹிந்தி ஈஸ்ட்மன் வண்ணத் திரைஓவியம்.

REGAL (Jaffna) Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30, 6-15, 9-30
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30 6-30 & 9-45
ஜெமினி—பத்மினி
வீராங்கனை (புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
வியட்நாம் வீடு

தினசரி 4 காட்சிகள்
மனோகரா (யாழ்நகர்)
காந்தராவ் - மாலினி
வரலக்ஷ்மி நடித்த
ஜெய்பவானி
(புதிய பிரதி)
22-5-79 முதல்
கோமாதா! என் குலமாதா

ராணி (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஃ டொன் பொஸ்கோ ஃ காஞ்சனா
ஃ செல்வசேகரன் ஃ ஜவாகர்
ஃ ஜெயதேவி ஃ ஏகாம்பரம்
ஃ மணிமேகலை ஃ தர்மலிங்கம்
இன்னும் பலர் திறம்பட நடித்த
எங்களில் ஒருவன்


# இன்றைய பலன்

வைகாசிமாதம் 5-ம் திகதி
சனிக்கிழமை
(19-5-1979)

**மேடம்:** ஆசாரக் குறைவிற்கும் அவசரப் போக்கிற்கும் இடமுண்டு. இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக் கொள்ளவும். பூமிப்பிணக்கினால் வழக்கு விவகாரங்களில் ஈடுபட நேரிடலாம்.

**இடபம்:** தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும். உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படலாம். உற்சாகமான தினம்.

**மிதுனம்:** பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது. அமைதியான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களின் நட்பைப் பெறுவீர்கள். வீட்டிலும் மதிப்பு உயரும்.

**கடகம்:** அன்னிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவும். தெய்வ நம்பிக்கை சிறந்த பயன் தரும்.

**சிங்கம்:** ஒளிமயமான சூழ்நிலை இன்று உருவாகும். மற்றவர்களின் அன்பும் ஆதரவும் இன்று தாராளமாகக் கிடைக்கும். இருமனம் கலந்தவர்களின் மத்தியில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும்.

**கன்னி:** பிரச்னைகள் மேலும் சிக்கலாகும். உணவு விடயத்தில் பிரியக் குறைவு தென்படும். உடல் நலனில் அதிக கவனஞ் செலுத்தவும்.

**துலாம்:** பொதுப்பணி மூலம் பகழுக்கு இடமுண்டு. பிதாவழிமூலம் பொருள் வரவிற்கும் இடமுண்டு. தரும கைங்கரியங்களில் விருப்பு மேலிடும்.

**விருச்சிகம்:** முயற்சியால் உயர்வு உண்டு. பணவிவகாரங்களில் நல்ல திருப்பம் உண்டு. வீட்டில் சுபகருமங்கள் இடம் பெறலாம். சுக போக நாள்.

**தனுசு:** வரவிலும் உயர்வு தென்படும். எழுத்தாளர்களுக்குப் புகழ் குவியும். நல்ல நாள்.

**மகரம்:** பூமிப் பிணக்கில் ஒரு சமரச முடிவு ஏற்படலாம். வழக்கு விவகாரங்கள் தவிர்க்கப்படும். பின்னைகளின் செல்வாக்குப் பெருகும்.

**கும்பம்:** புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். புத்திரர்களால் குடும்பத்தில் புகழும் கிடைக்கும்.

**மீனம்:** இதயம் இன்பத்தால் விம்மும். இல்லத்திலும் இனிமை தவழும். உறவினர்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும்.


சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## பணியாளர் பொதுக்கூட்டம்

(பலாலி)

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தின் பணியாளர் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. சங்கக் காரியாலய மண்டபத்தில் தலைவர் வி. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் 'நிரந்தர ஊழியர் இருவர் அண்மையில் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும், இனிமேல் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படவிருக்கிறது. திரு திருச்சிற்றம்பலம், திரு இ. இராசேந்திரம் ஆகியோர் இக்கூட்டத்தில் ஆலோசனை வழங்குவர். (ஈ)


வெலிங்டன்? வெல்லிங்டன்
(சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-ராதாசலூஜா
இதயக்கனி

வயாவிளான் ஞானவைரவர் சனசமூகநிலையம் அமரர்செல்லப்பா குாரபசாமி ஞாமகார்த்தக் கேடயத்திற்காகவும் 'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்திற்காகவும் மின்னொளியில் நடாத்திய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட திருநெல்வேலி சிவன் வி. கழகக் காப்டன் திரு. கே. சுப்பிரமணியத்திற்கு பிரதமவிருந்தினர் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணம் பரிசளிப்பதை 1வது படத்திலும் நிலையச்செயலாளர் திரு. எம். ஜெகநாதன் நன்றி தெரிவித்துப் பேசுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## "பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் கல்வி வளர்ச்சி பெற பெரிதும் உதவும்"

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் பாடசாலைகளில் இயங்கிவந்த பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் கல்வி அமைச்சின் புதிய திட்டத்தின்கீழ் அபிவிருத்திச் சங்கங்களாகமாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் கல்லூரிகள் வளர்ச்சிபெறவும் மாணவர்கள் கல்வி வளர்ச்சிபெறவும் மாணவர், ஆசிரியர்கள் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவும் பெரிதும் உதவும்

இவ்வாறு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச்சங்கத் தொடக்க விழாவில் சிறப்புரையாற்றிய கல்வி அதிகாரி திரு. ஆ. சி. நல்லையா குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. மூ. பத்மநாதன் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. நல்லையா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மாணவத் தலைவர்கள், நலன்விரும்பிகள் எல்லோரும் அங்கம் வகித்து கல்லூரியினதும் மாணவர்களினதும் ஏன் இந்த நாட்டின் அபிவிருத்திக்குமே பாடுபட்டு உழைக்கலாம்.

இச்சங்கத்தின் மூலம் சகலரின் ஒத்துழைப்பையும் பெற்று

[6ம் பக்கம் பார்க்க]

## இவ்வருடம் மாத்திரம் அனுமதி

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் சுடலை வைரவர் ஆலயத்தில் உயிர்களைப் பலியிடுதலை இவ்வருடம் மட்டும் அனுமதிப்பதாக மல்லாகம் நீதிபதி ஆனந்தக் குமாரசாமி தீர்ப்பு வழங்கினார்.

உயிர்ப்பலியை தடைசெய்ய இடைக்காலத் தடை உத்தரவு வழங்குமாறு கோரி திரு மு. செல்லக்குட்டி தாக்கல் செய்திருந்த மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிர் மனுதார்களான கோயில் பரிபாலன சபையினர் தாம் பலியிடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து இவ்வருடம் மட்டும் அனுமதி வழங்கிய நீதிபதி பலியிடுதல் மூலம் சேகரிக்கப்படும் பணம் முழுவதையும் ஒருவார காலத்தில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் தெரிவித்தார்.

## ஓய்வுபெற்றார்



(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பணியில் முப்பது வருடங்கள் பணியாற்றிய திரு. இராஜலிங்கம் சின்னத்தம்பி ஓய்வு பெறுகின்றார்.

இவர் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தொற்றுவத்தைக் கிளை முகாமையாளராகவும், பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராகவும், உடுப்பிட்டி கிராமப்பகுதிக்கான இணக்கசபை உபதலைவராகவும், தொற்றுவத்தைக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராகவும், பொலிகண்டி வீரபத்திர ஆலய தர்மகர்த்தா சபையில் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

சிறந்த சமூகசேவையாளரான இவருக்கு அண்மையில் நடைபெற்ற இவரது பிரிவுபசார வைபவத்தின்போது உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் திரு சி. குழந்தைவேல் 'கூட்டுறவின் தந்தை' எனப் பட்டமளித்துக் கௌரவித்தார். [கா]

# "எமது அரசில் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு இடமில்லை"

## கருத்தரங்கில் பிரதமரின் பாரியார்

[வெள்ளவத்தை]

"எமது அரசின் கீழ் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு இனிமேல் இடமளிக்கமாட்டோம். இது நான் உங்களுக்குத் தெரிவிக்கும் நம்பிக்கையாகும்"

இவ்வாறு பிரதமரின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாஸா தமிழில் பேசினார்.

நடந்த ஞாயிற்றுக்கிழமை இராமகிருஷ்ண சிறிய மண்டபத்தில் "பெருந்தோட்டத் தொழிற்துறை, தொழிற்சங்க நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் முதலில் ஆங்கிலத்திலும் பின்னர் தமிழிலும் திருமதி பிரேமதாசா உரைநிகழ்த்தினார்.

திருமதி பிரேமதாஸமேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்தகால வரலாற்றைப் பார்க்கும்பொழுது மலையகப் பெண்கள் கடுமையாக உழைத்தாலும் அதற்குஏற்ற நன்மைகளை அவர்கள் அடையவில்லை. அவர்கள் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டநிலையில் தான் வாழ்ந்தார்கள். ஆனால், இன்று மலையகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. தொழிற்சங்கத் தலைவர் திரு எஸ் தொண்டமான் இன்று அமைச்சராகியுள்ளார், எனவே மலையகத் தொழிலாளர் வாழ்வில் புதிய மறுமலர்ச்சி ஏற்படும்.

பெருந்தோட்டத் துறையில் பிரதான பங்கு வகிப்பவர்கள் பெண்களே. இந்நாட்டின் பொருளாதார வளத்திற்கு அவர்கள் கணிசமான பங்கை செலுத்திவருகின்றனர். ஆனால் அவர்கள் தொழிற்சங்க துறையில் பங்குவகிப்பதில்லை என தெரியவருகிறது"

### தோட்டத் தொழிலில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண்கள்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு எம் எஸ் செல்லச்சாமி பேசுகையில் கூறியதாவது:

எமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பெண்களின் பங்கு மகத்தானது. எமது சங்கம் நாற்பது ஆண்டுகளாகச் செயற்படுவதற்குப் பெண்களே காரணம். இன்று தோட்டத் தொழிலாளர்களில் ஐம்பத்து நாலு சதவீதமானோர் பெண்களே.

தோட்டப் பெண்களுக்கு பலவிதமான பிரச்னைகளுண்டு காலையில் எழுந்து இரவு உறங்கப் போகும்வரை உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் குடும்பப் பொறுப்பு, பிள்ளைகளைப் பராமரித்தல், உணவு சகல விஷயங்களிலும் அவர்களே பொறுப்பாக இருக்க வேண்டியுள்ளது. இதற்காக பலமணி நேரங்களைச் செலவிடவேண்டியுள்ளது.

ஆசிய பிராந்திய பிரதிநிதி திரு எஸ் செல்லையாவும் உரைநிகழ்த்தினார். சட்டத்தரணி செல்வி யோகா இராமலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசினார். [ஏ]

## அழகப்பனுக்கு கௌரவம்

[யாழ்ப்பாணம்]

தமிழகத்துப் பேராசிரியர் ஆறு. அழகப்பனை கௌரவிக்கும் முகமாக முத்தமிழ் வெளியீட்டுக்கழகம் நாளை மாலை 4-30 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் தேநீர் விருந்தொன்றை அளிப்பதுடன் கலந்துரையாடலையும் நடத்தவிருக்கின்றனர். முத்தமிழ் வெளியீட்டுக் கழகத் தலைவர் கலாநிதி ஆ. சண்முகதாஸன் இவ்வைபவத்துக்குத் தலைமை தாங்குகிறார். (கா-இ)

## விபத்தில் 2 பேர் பலி!

[கொழும்பு]

கொழும்பிலிருந்துநீர்கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று நேற்று சீதுவையில் லொறியுடன் மோதியதை அடுத்து இருவர் பலியாகினர். மற்றும் ஆறு பிரயாணிகள் கடுங்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

## வடபிரதேச ஐ. தே. க.........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காயம் ஏற்பட்டது.

### அவசர சத்திரசிகிச்சை

முதலில் மந்திகை ஆஸ்பத்திரியிலும், பின்னர் யாழ். ஆஸ்பத்திரிலும் அனுமதிக்கப்பட்ட தர்மகுலசிங்கத்திற்கு ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது

காரில் வந்த இளைஞர்களில் சிலர் சாரமும், சிலர் நீட்டுக்காற்சட்டை ஷேர்ட் அணிந்திருந்தனர் என்றும் திரு கணேசலிங்கத்தின் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த கார்களிலும் இருந்த சாரதிகளை துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி விட்டே வளவுக்குள் பிரவேசித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

### கார், ஜீப் கண்ணாடிகள் சேதம்

இச் சம்பவத்தினால் அங்கு நின்ற கார்கள், ஜீப்களின தும் கண்ணாடிகள் சேதமடைந்தன.

பயங்கர ஆயுதங்களுடன் திரு. கணேசலிங்கத்தைச் சுட்டுக் கொலைசெய்யும் நோக்குடனேயே இந்த இளைஞர் கோஷ்டி அங்கு வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர்கள் ஸ்தலத்திற்கு விரைந்தனர் பொலிஸ் விசாரணைகள் தொடர்கிறது-

### அமைச்சர்கள் விரைந்தனர்

[புலோலி]

யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியிருக்கும் கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா, இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்கா ஆகியோர் நேற்றுப் பகல் திரு கணேசலிங்கத்தின் இல்லத்திற்குச் சென்று துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தைப் பார்வையிட்டனர்.

பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் இதுகுறித்து அச்சம்கொள்ளாது இன்று நடைபெறும் தேர்தலில் வாக்களிக்குமாறும் அமைச்சர்கள் அப்பகுதி மக்களைக் கேட்டுள்ளனர். [இ]

## கலையரசரை ஆறு. அழகப்பன் இன்று சந்திப்பார்

[யாழ்ப்பாணம்]

அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைப் பேராசிரியர் டாக்டர் ஆறு. அழகப்பன் இன்று கலையரசு சொர்ணலிங்கத்தை சந்திப்பார்.

இன்று காலை பேராசிரியர் ஆறு அழகப்பனை 'சிவநெறிப் புரவலர்' க. கனகராசா சந்திப்பார். இதனைத் தொடர்ந்து யாழ். நகரின் பல கோவில்களையும் அவர் தரிசிப்பார்.

"90 வயதுள்ள கலையரசு சொர்ணலிங்கத்தை நான் அவசியம் சந்திக்கவேண்டும். அவரை நேரில் சந்தித்து அளவளாவுவதில் பெருமகிழ்ச்சி அடைவேன்" என்று பேராசிரியர் ஆறு. அழகப்பன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## முறையற்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யர்களை பகடைக்காய்களாக மதித்து எவ்வித காரணமுமின்றி செய்யப்படும் இடமாற்றங்களை உடன் நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்த இடமாற்றங்களுக்கான காரணங்கள் ஏதுவும் இருப்பின் அவற்றைத் தெரியப்படுத்துக.

பண்டிதர் இரத்தினம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மற்றுமொரு தந்தியில் தெரிவித்துள்ளதாவது:-

### சிங்களக் கடிதங்கள்

தமிழ் ஆசிரியர்களுக்கு சிங்களத்தில் அனுப்பப்படும் இடமாற்றக் கடிதங்களை உடன் நிறுத்தி அவர்களுக்கு தமிழில் கடிதங்கள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

இதுதான் அதி உத்தம ஜனாதிபதி அவர்களின் அரசாங்கம் தமிழருக்கு வாரிவழங்கிய தமிழ் உரிமையா என்று மக்கள் கிண்டல்செய்கிறார்கள்

## இம்மாதத்திலிருந்து யாழ்ப.நோ.கூ.சஊழியர்க்கு 50 ரூபா சம்பள உயர்வு

(யாழ்ப்பாணம்)

அரசினால் சிபாரிசு செய்யப்பட்ட 50 ரூபா சம்பள உயர்வு இதுவரை பெறாதிருந்த யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் இம்மாதம் முதல் இவ்வுயர்வைப் பெறவுள்ளனர். இச்சம்பள உயர்வு உட்பட மற்றும் சில கோரிக்கைகளைச் சங்க நிர்வாகத்திற்கு முன்வைத்த கூட்டுறவு ஊழியர் சங்கப்பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது சங்கத் தலைவர் திரு. மு. ஆலால சுந்தரம் சம்மதம் தெரிவித்தார்.

முந்திய இயக்குநர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க அனுப்பப்பட்டு ஆளைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கும் ஆளணித் திரட்டுப் பட்டியலில் உள்ளவர்கட்கு உடனடியாக வந்த திகதியிலிருந்து நிரந்தர நியமனப்பத்திரத்தை வழங்குதல் வேண்டும் என்றும், ஊழியர்களை நிரந்தர மாக்குவதற்கான தடைக் கோரிக்கையை உடனடியாக வாபஸ் பெற்று, ஊழியர்கள் அனைவரையும் உடனடியாக நிரந்தரமாக்குதல் வேண்டும் என்றும் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு; பதவி நியமனத்திற்குரிய வேதனம் மே மாதம் முதல் வழங்கல் நெறியாளர் குழுவின் அங்கீகாரத்துடன் வழங்கப்படும் என்றும், புதிய தொழிற்பாடுகள் செயற்படத் தொடங்கியதும் ஆளணித்திரட்டு நிர்ணயிக்கப்படும என்றும் சங்கத்தலைவர் சம்மதம தெரிவித்தார்.

மற்றும் கோரிக்கைகளுக்கும பேச்சுவார்த்தைகளின்போது தீர்வு காணப்பட்டது. (கா-இ)

## மரண அறிவித்தல்

### ஆ. பாலசுப்பிரமணியம்

இளைப்பாறிய நிர்வாக அதிகாரி [நீர்ப்பாசனத் திணைக்களம்] திரு ஆறுமுகதாஸ் பாலசுப்பிரமணியம் காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சபாநாதன், சிதம்பரநாதன், பவானி, ஸ்ரீரஞ்சனி, சிவநாதன் ஜெகநாதன் ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் நான்கு மணிக்கு 14, மணத்தறை ஒழுங்கை, கந்தர் மடத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 3493

## பாடசாலை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பாடசாலையில், தொழிற்கல்வி, விவசாயம், கோழிப்பண்ணை அறுதைகள் விடுதி, கலை, விஞ்ஞான ஆய்வுகூட அபிவிருத்தி ஆகியவற்றைச் செய்யக்கூடியதாகவும், ஒற்றுமையையும் சகோதரத்துவத்தை வளர்க்கக்கூடியதாகவும் மாணவர்களின் கஷ்டங்களைத் தீர்க்கக்கூடியதாகவும் இருக்கும்.

கல்வித்திணைக்கள அதிகாரிகள் இளைப்பாறிய யாழ். மாவட்ட நீதிபதி திரு எஸ். தம்பித்துரை உட்பட மற்றும் பலரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். [கொ-இ]

## உற்சாகத்துடன் ஆடுகின்றார்

[யாழ்ப்பாணம்]

டுவிஸ்ட் நடனத்தில் புதிய உலக சாதனையை நிலைநாட்டும் முயற்சியை, மானிப்பாயைச் சேர்ந்த இளைஞர் க. செல்வம் நேற்றுக் காலை 6-55க்கு ஆரம்பித்து உற்சாகமாக ஆடிக்கொண்டிருக்கிறார்.

## கூட்டணி காரியாலயம் சேதம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரியாலைப் பகுதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் காரியாலயம் ஒன்று நேற்று சேதப்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

## புதிய மாணவரை அனுமதிக்க வேண்டாம்

[கொழும்பு]

2500 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் அமைச்சின் அனுமதியின்றி புதிய மாணவர்களை அனுமதிக்கவேண்டாம் என்று கல்வி அமைச்சு சகல பாடசாலைகளுக்கும் உத்தரவிட்டுள்ளது.

அவசியம் ஏற்படும்பட்சத்தில் மேலும் மாணவர்களை அனுமதிக்கவேண்டுமாயின் அதே பாடசாலையின் நிர்வாகத்தின்கீழ் கிளைப் பாடசாலைகளை அமைக்குமாறும் அமைச்சு உத்தரவிட்டுள்ளது. [இ]

## இன்று சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயத்தில் இன்றுகாலை 7 மணி முதல் 11 மணி வரை அட்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும்

இரவு பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மாவின் கதாப்பிரசங்கமும், அளவெட்டி திருமதி பார்வதி சிவபாதத்தின் பக்திப் பாடல் நிகழ்ச்சியும் நடைபெறும். இவற்றைத்தொடர்ந்து அம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலாவருவார். [கா-இ]

## வட பிராந்திய இ.போ.ச. ஊழியர் மௌனாஞ்சலி

[யாழ்ப்பாணம்]

பஸ் விபத்துக்களில் மரணமடைந்தோருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தினமும் காலை 9 மணிக்கு 2 நிமிட மௌனாஞ்சலி செலுத்திவருகிறார்கள்.

வட பிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு வே. அமரசிங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க வட பிராந்தியத்தில் உள்ள சகல சாலைகளிலும் காரியாலயங்களிலும் ஊழியர்கள் இம்மாதம் 1ம் திகதி முதல் தினமும் 2 நிமிட மௌனாஞ்சலி செய்துவருகின்றனர். [இ]

## கிளர்ச்சி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னம் ஒன்றை இலங்கை விமானப்படை கொள்வனவுசெய்யவுள்ளது.

இப்போது உள்ளதைவிட மேலும் பல விமான இறங்கு துறைகளை அமைக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. [இ]

## மரண அறிவித்தல்

### முருகேசு கனகரத்தினம்

நல்லூரைச் சேர்ந்த முருகேசு கனகரத்தினம் (லைரக் கனகர்) காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இல. 17, நாவலர் வீதி, நல்லூர். 2495

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No. 49. Telegrams: Eelanaadu Telephone: 382.